**விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்தின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள்ஈ கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம்37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் பங்களிப்பாளர்கள் மற்றும் விவசாய ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பானது காலரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிக்கப்படவேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியாக காப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஓய்வூதியப் பொறுப்பு கணிக்கப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 82,435,153,268 ஆகும். மேலும் நிதியத்தினால் இக்கடப்பாட்டினை தீர்த்துவைப்பதற்கு போதிய முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2007 ஆம் ஆண்டின் போது காப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் ஓய்வூதியம் பொறுப்பினை கணக்கீடு செய்து அந்த பழைய திட்டத்திற்கு புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. புதிய திட்டத்தினை ஸ்தாபித்து புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். புதிய விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் காப்பீட்டு மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பழைய திட்டத்தினதும் காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஓய்வூதிய பொறுப்பு காலரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிக்கப்பட வேண்டியதுடன் கடப்பாடுளைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு பேணப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்படுகின்ற பங்களிப்பாளர்களிடமிருந்து கணக்காண்டிற்காக கிடைக்க வேண்டிய பங்களிப்பு பணத்தின் பெறுமதியை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் ஓய்வூதியத் திட்டத்திற்காக இணைந்து கொண்ட திகதி மற்றும் உரிமைகோரும் திகதியை உள்ளடக்கி | பங்களிப்பாளர்களின் தகவல்களை கணனி முறைமையினூடாக பெற்றுக்கொள்ளலாம். தவணைப் பணங்களை கணனிமயப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதனால் இரத்துச்செய்யப்பட்ட மற்றும் செயற்பாடற்ற பங்களிப்பாளர்களை | பங்களிப்பாளர்களின் பெயர்ப் பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பாளர்களின் பெயர்ப் பதிவேட்டினை தவணை பண பெறுவனவுகளை உள்ளடக்கி முழுமையாக மற்றும் நாளதுவரையாக பேணாமையால் பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்ற வருமானததை அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் ரூபா 13,420,221 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முறைமையினூடாக பெற்றுக்கொவதில் சிக்கல் உள்ளது. அதனால் தவணைப் பணத்தை சுயமாக கணனிமமயப்படுத்துவதற்கான ஒரு வேலைத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் விவசாயிகள் ஓய்வூதியத்தினை கொடுப்பனவு செய்வதற்காக பொதுத்திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,968,000,000 பணத்தில் ரூபா 3,918,881,123 தொகையினை செலுத்தியதன் பின்னர் மிகுதிப் பணம் ரூபா 49,118,877 மீண்டும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்காததுடன் அது மீளச் செலுத்த வேண்டிய பணமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் அண்டில் விவசாயிகள் ஓய்வூதியச் செலவு ரூபா 4,053,000,000 ஆக இருந்ததுடன் திறைசேரியிடமிருந்து பெற்ற ரூா 3,998,000,000 பணம் முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது. அந்த முழுச் செலவில் பங்களிப்பாளர்களால் பெற்றுக்கொள்ளப்படாது மீளக்கிடைத்த பணத்தை கழித்ததன் பின்னரான பெறுமதியே வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றது. இதற்கிணங்க திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ஒரு மீதி இல்லை. | பங்களிப்பாளர்களுக்கு செலுத்தப்படாத பணத்தை திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவுகளில் உரிமை கோரப்படாத ரூபா 167,470,484 தொகை விவசாயிகளுக்கு மீளச் செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாது திட்டத்தின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் உரிமை கோரப்படாத ரூபா 167,470,484 ஓய்வூதிய பணமானது செலவிலிருந்து கழித்து காட்டப்பட்டுள்ளது. நீண்ட காலமாக ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளாத பங்களிப்பாளர்களின் ஓய்வூதியத்தினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் இந்த உரிமை கோரப்படாத பணம் பெறவேண்டிய ஓய்வூதியமாக கணக்கீடு செய்யப்படவில்லை. | பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வூதியம் செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2019 சனவரியிலருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ரூபா 4,435,400 தொகையான உரிமை கோரப்படாத தேறிய தவணைப் பணமும் மாதாந்த பலவீன கொடுப்பனவுக்கான 612 காசோலைகளும் நி.பி 396 (ஈ) (iii) இன் பிரகாரம் கொடுப்பனவுக்கு உள்ள ஒரு கடனாக பதியப்படாது அந்த அந்த ஆண்டின் போது வருமானத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | காலங்கடந்த காசேலைகள் பதிவேட்டில் பதியப்பட்டு வருமானத்திற்கு எடுத்தல் இடம்பெறுவதுடன் கிடைக்கின்ற வேண்டுதல்களுக்கு இணங்க மீண்டும் காசோலைகள் வழங்கப்படும். | உரிமை கோரப்படாத ஓய்வூதியங்கள் செலுத்த வேண்டிய கடன் மீதியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் நிருவாக செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்ற ரூபா 190,000,000 விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்படாது | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு திறைசேரியிடமிருந்து கிடைக்கும் பணத்தை வழங்குவதற்காக பட்டியல்படுத்தப்பட்ட கணக்கானது இலங்கை வங்கியில் யூனியன் | திறைசேரி நிதி ஏற்பாட்டிலிருந்து திட்டத்தின் வங்கி கணக்கிற்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் வங்கி கணக்கிற்கு செலவு வைத்து அதிலிருந்து செலவு செய்து ஒரு நடைமுறைக் கணக்கின் மூலம் அந்த கொடுக்கல் வாங்கல் நிதியத்ததின் பேரேட்டில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | பிளேஸ் கிளையின் சபையின் 164667 ஆம் இலக்க கணக்காகும். அக்கணக்கிற்கு கிடைக்கின்ற உரிய பணம் நடைமுறைக் கணக்கினூடாக விவசாய காப்புறுதி திட்டதத்திலிருந்து விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு மாற்றப்படும். | |
| (ஊ) | மிளாய்வாண்டின் போது இத்திட்டம் தொடர்பாக சட்டரீதியான கொடுக்கல் வாங்கல்கள் இல்லாதிருந்தும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் சட்ட செலவுகளில் 60 சதவீதத்திற்குச் சமமான ரூபா 1,348,623 தொகை இத்திட்டத்தின் சட்ட செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இச்சதவீதத்தினை தீர்மானித்த அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையின் சட்ட செலவுகளில் 60 சதவீதமானது விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டள்ளது. எனினும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு சட்டச் செலவுகளை மீண்டும் மீளாய்வு செய்து இத்திட்டத்தின் சட்டச் செலவுகளை மாத்திரம் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் செலவுகளை பகிர்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுக் கணக்குகள் அனைத்து ம் திருத்தம் செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டம் தொடர்பான செலவுகளை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம், கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை ஆகிய மூன்று கணக்கு பிரிவுகளும் இணைந்து செயற்பட்டிருந்த போதிலும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் நிருவாகச் செலவுகளில் 50 சதவீதம் மற்றும் ஏனைய செலவுகளில் 20 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையான உயர்ந்த சதவீதம் உள்வாங்கப்பட்டிருந்தது. அச்சதவீதங்களின் நியாயத்தன்மையைப் பரீட்சிப்பதற்காக வீகிதாசாரத்தை தீர்மானித்த அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் இருக்கின்ற பதவியணியினர் பொதுவாக சேவையில் ஈடுபடுத்தப்படுவதனால் இவ்வாறு வீதாசாரம் தீர்மானிக்கப்பட்டது. எனினும் எதிர்காலத்தில் இந்த வீதாசாரத்தை பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவுகளை உள்ளீர்க்கும் விகிதாசாரம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| திட்டத்தின் முழுச் சொத்துக்கள் ரூபா 1,516,033,327 ஆகவும் முழுப் பொறுப்புக்கள் ரூபா 87,508,723,633 ஆகவும் இருந்ததுடன் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா | விவசாயிகளின் ஓய்வூதியப் பொறுப்புக்கள் வருடாந்தம் அதிகரிப்பதுடன் திட்டத்தினுள் முதலீடுகள் இல்லாமையும் இத்திட்டத்தின் தவணைப் | திட்டத்தை செயற்பாடுள்ளதாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 85,992,690,306 ஆகும். இச்சாதகமற்ற நிலைமையானது திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | பணத்தினை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் கொள்கையினால் நலன்களை அதிகரித்ததன் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தின் பாதீட்டின் மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஓய்வூதியம் செலுத்துதல் இடம்பெற்று வருகின்றது. |

### 1.5.4 கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தபால் திணைக்களத்தின் மாவட்ட கணக்கு அலுவலகங்களிலிருந்து மீளப்பெறுவதற்கு உள்ள உரிமை கோரப்படாத ரூபா 47,102,835 ஓய்வூதியப் பணத்தின் சரியான தன்மையைப் பரீட்சிப்பதற்கு முடியுமான வகையில் சபையினால் ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் ஓய்வூதியத்தினை செலுத்தும் நடைமுறையானது தபால் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் செலுத்தப்படாத ஓய்வூதியம் உரிய மாதத்தின் பின்னரான மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் சிக்கலான நிலைமையின் அடிப்படையில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்தும் தற்பொழுது அத்தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்குள் செலுத்தப்படாத ஓய்வூதிய ஆவணங்களை சபைக்கு அனுப்புமாறு மாவட்ட கணக்காளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிமைகோரப்படாத பணம் தொடர்பான தகவல்களை முழுமையாகவும் நாளதுவரையாகவும் பேணுதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| 1.6.1 | **1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம்** | | | | |
| | (அ) 6(1)உப பிரிவு | பங்களிப்பாளர் தான 60 வயதாகுகையில் ஓய்வூதியத்திற்கு தகமைபெற வேண்டிய போதிலும் இத்திட்டத்தில் | | | |
| | | (i) | ஓய்வூதிய விண்ணப்பத்தை பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் விண்ணப்பிக்க வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட திகதிகள் தொடர்பாக அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கும் விண்ணப்பப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்குமான ஒரு நடைமுறை காணப்படவில்லை. | 60 வயது பூர்த்தியடைந்த விவசாயிகளின் விபரம் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மின் அஞ்சல் மூலமும் SMS தகவலலின் மூலமும் தெரியப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கமநல சேவை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் தெரிய்படுத்தி விவசாயிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலகுவான ஒரு முறைமை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| | | (ii) | நிர்ணயிக்கப்பட்ட வயதினை பூர்த்தி செய்துள்ள விவசாயிகளை இனங்காணும் ஒரு நடைமுறை இல்லாமையின் காரணமாக நலனாளிகளினாலேயே ஓய்வூதிய நலன் விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதனால் நலனாளி வைத்தியசாலையில் | 60 வயது பூர்த்தியான விவசாயிகளுக்கு தெரியப்படுத்துவதற்காக அவர்களால் வழங்கப்பட்டுள்ள விலாசத்திற்கு தபால் அனுப்பப்பட்டு அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கும் பத்திரிகை அறிவித்தலின் மூலம் விவசாயிகளுக்கு தெரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்ணயிக்கப்பட்ட வயது பூர்த்தியடைந்த விவசாயிகளை அடையாளம் காணும் ஒரு நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்டு அல்லது வீட்டில் தங்கி சிகிக்சையினை பெற்றுக்கொள்ளல் பங்களிப்பு பண குறிப்பு புத்தகம் காணாமல் போதல், பங்களிப்பு பண குறிப்பு புத்தகம் இல்லாது சபைக்கு விண்ணப்ப படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் சமர்ப்பிக்க முடியாமை போன்ற காரணங்களினால் விண்ணப்பப் படிவத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பிக்காத தாமதத்தினாலானநட்டத்தை அவர்களாலேயே தாங்கி கொள்ள வேண்டியுள்ளது.. | | |
| (iii) | மீளாய்வாண்டின் போது 4 மாவட்டங்களின் 12 விவசாயிகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது தவணைப் பணத்தை மீளச் செலுத்தும் போது 2 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலதாமதம் காணப்பட்டதுடன் நிர்ணயிக்கப்பட்ட வயது பூர்த்தியான திகதியிலிருந்து 10 மாதங்களுக்கும் 9 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் ஓய்வூதியத்தினை வழங்குதல் தாமதித்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | மாவட்ட அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்ப படிவங்களுக்காக தாமதமின்றி ஓய்வூதியத்தினை வழங்குவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மாவட்ட பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பங்களிப்பாளர் மாவட்ட அலுவலகத்திற்கு ஆவணங்களை ஒப்படைத்த சந்தர்ப்பத்தின் போது அந்த பங்களிப்பாளருக்கு ஒரு இலக்கம் வழங்குவதற்கும் அத்தகவலை தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு முன்னர் Google Drive இல் நாளதுவரையாக்குவதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது மாவட்ட | 60 வயது பூர்த்தியான திகதியிலிருந்து விவசாயிகள் ஓய்வூதியம் செலுத்த வேண்டியதுடன் தேறிய தவணைப்பண கொடுப்பனவை தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகங்களின் மூலம் அந்த நடைமுறை வெற்றிகரமாக இடம்பெறுகின்றது. | |
| (iv) | காணப்படுகின்ற தரவு முறைமையினுள் 871,425 பங்களிப்பாளர்கள் பதிவு செய்துள்ளதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதினைப் பூர்த்தியடைந்த 439,025 பங்களிப்பாளர்களில் 246,531 பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதிய நலன்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 60 வயது பூர்த்தியான விவசாயிகளின் பெயர்ப் பதிவேட்டினை, அந்த மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அப்பதிவேட்டினை கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கி அதனூடாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் பத்திரிகை அறிவித்தல் மற்றும் நேரடி தெரியப்படுத்துதல்களின் மூலம் இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 60 வயது பூர்த்தியடைந்த திகதியிலிருந்து விவசாயிகளுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (v) | ஓய்வூதிய நலன்களுக்கு தகமைபெற்ற திகதியிலிருந்து ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட திகதி வரையான காலத்திற்குரிய பணத்தை விவசாயிகளுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரையான நிலுவையான ஓய்வூதியம் ரூபா 3,914,947,932 தொகை நிதிக்கூற்றுக்களில் | எதிர்காலத்தில் எந்த நிலுவைப் பணமும் உருவாகாத வகையில் ஓய்வூதியத்திற்கு தகமை பெறுகின்ற சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதியப் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. செலுத்த வேண்டிக் காணப்பட்ட ஓய்வூதியத்தினை எதிர்காலத்தில் திறைசேரி நிதி ஏற்பாட்டினைப் பெற்று | 60 வயது பூர்த்தியடைந்த திகதியிலிருந்து விவசாயிகளுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்த்து வைக்கப்படாது தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | முறைப்படியாக செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 12 (இ) உபபிரிவு | .திட்டம் சம்பந்தமாக தேவையான நிதி மற்றும் செயற்பாட்டு அறிக்கை பேணப்பட வேண்டிய போதிலும் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தின் தொடக்க காலப்பகுதியில் கணனி முறைமை பேணப்படாது தவணைப்பண பதிவுப் புத்தகத்தை பேணுவதனூடாக தவணைப் பண கொடுப்பனவை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. தவணைப் பணத்தை அறவீடு யெ்யும் எம்.எஸ்.பி.5 பற்றுச்சீட்டு அறிக்கையினை மாவட்ட அலுவலகத்திலேயே பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பலவீனத்தை தவிர்த்துக்கொள்வதற்காக புதிய கணனி முறைமையினை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கை தற்பொழுது அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. | திட்டம் சடம்பந்தமான தேவையான நிதி மற்றும் செயற்பாட்டு அறிக்கை பேணப்படுதல் வேண்டும். |
| (இ) | 12 (ஈ) உபபிரிவு | திட்டம் தொடர்பாக புலனாய்வு மதிப்பீடு மற்றும் மீளாய்வு செய்து செயற்பாட்டு விதிகளில் வித்தியாசம் ஏற்படுதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் | | |
| | | (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு விதி இல்லாது அரை ஆண்டிற்கு 3.32 சதவீதத்தின் அடிப்படையில் தேறிய தவணைப் பணம் மீது வட்டி கணிக்கப்பட்டிருந்தது. | முறைப்படியாக பங்களிப்பு பணத்தை செலுத்தாத பங்களிப்பாளர்களுக்கு தேறிய தவணைப் பணம் மற்றும் வட்டியை செலுத்துமாறு 1987 இன் 452/12 ஆம் | தேறிய தவணைப் பணத்தின் அடிப்படையில் வட்டியை கணிப்பதற்கு ஒரு சட்டவிதி கட்டியெழுப்பப் படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | இலக்க வர்த்தமானி அறிவுறுத்தலின் 13 ஆவது கட்டளையின் மூலம் காட்டப்பட்டுள்ளது. அக்கணிப்பீடானது ஆயுள் கணிப்பு நிபுணரினால் மேற்கொள்ளப்பட்டது. | வேண்டும். |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டவிதி இல்லாது நலனாளிகளின் தேறிய தவணைப் பணத்தை கணிப்பீடு செய்யும் போது அவரினால் செலுத்தப்பட்ட அனைத்து ஒவ்வொரு தவணைப்பணத்திலும் ரூபா 15 வீதமான நிர்வாகச் செலவு, விவசாயி முறையாக செலுத்திய ஒவ்வொரு தவணைப்பணத்திற்கும் ரூபா 30 வீதம் காப்புறுதி கட்டணமும் கணிக்கப்பட்ட தேறிய தவணைப் பணத்திலிருந்து ரூபா 150 காப்புறுதிக் கட்டணமும் கழிக்கப்பட்டிருந்தது. | நிருவாக மற்றும் செயற்பாட்டு செலவுகளில் குறித்த சதவீதம் உள்ளடக்கப்பட்டு காப்புறுதி தவணைப் பணம் தீர்மானிக்கப்படும். இது காப்புறுதி நிறுவனத்தின் வழக்கமான நடைமுறையாகும். விவசாயிகள் ஓய்வூதிய திட்டமானது அரசாங்க நிவாரணத்தினை அடிப்படையாகக் கொண்டு அமுல்ப்படுத்தப்பட்டு வருவதனால் தவணைப் பணத்திற்காக இலாபம் உள்ளடக்கப்படுவதில்லை. பங்களிப்பிலிருந்து கேட்டு விலகிக் கொள்ளும் போது அல்லது தேறிய தவணைப் பணத்தை கணிப்பீடு செய்யும் போது உரிய செலவுகளுக்காக குறித்த சதவீத்தினை கழித்தல் காப்புறுதி நடைமுறையில் உள்ளடக்கப்பட்ட வழக்கமான நடைமுறையாகும். அதற்கிணங்க அக்கணிப்பு இடம் பெற்றிருந்தது.அவ்வான்றி சுய நிதித்திட்டத்தினை அமுல்ப்படுத்த முடியாது. | சட்ட விதிககளால் உள்ளடக்கப்படாத தள்ளுபடிகளை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 15 ஆம் பிரிவு | 15(2) இலிருந்து 15(5) வரையான உப பிரிவின் பிரகாரம் தொடராக 5 தவணைப்பணங்களை செலுத்த தவறுதல் தொடர்பாக பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தாமை போன்ற நிபந்தனைகள் சபையினால் மீறப்பட்டமையால் விவசாயிகளுக்கு நலன்கள் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | 15 ஆம் பிரிவின் கீழ் தவணைப் பணத்தை செலுத்த தவறியுள்ள பங்களிப்பாளர்களுக்கு நிவாரண காலம் வழங்கும் இயலுமை சபையிடம் உள்ளது. அதற்கிணங்க கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு முழுமையாக தவணைப் பணங்களை செலுத்தியுள்ள பங்களிப்பாளர்களுக்கு நிவாரண காலம் வழங்கி பங்களிப்பினை செயற்பாடுள்ளதாக்கி ஓய்வூதியத்திற்கு தேவையான நடவக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தவணைப் பணத்தினை முறைப்படியாக செலுத்தாமையின் அடிப்படையில் நலன்கள் இழப்பதற்கு உள்ள ஆபத்து தொடர்பாக பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | 27 (1) ஆம் பிரிவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கடனின் அளவு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளாது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையிடமிருந்து விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினால் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கடனின் மீதி ரூபா 484,160,453 என அவதானிக்கப்பட்டது. | 2010 ஆம் ஆண்டளவில் விவசாயிகள் ஓய்வூதிய நிதியம் பூச்சியமாக இருந்ததனால் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகள் ஓய்வூதியத்தினை செலுத்துவதற்காக அத்திட்டத்தில் பணம் இருக்கவில்லை. அதற்கிணங்க நிதி அமைச்சினால் வழங்கிய சிபாரிசுகள் மற்றும் ஆலோசனைகளுக்கு இணங்க விவசாய காப்புறுதி மற்றும் கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்திலிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் திட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்படும் கடனின் அளவு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட்டது. இந்த பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் ஒரு கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கடன் பணத்தை படிப்படியாக மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 1.6.2 | விவசாயிகள் ஓய்வூதிய சான்றிதழ் உறுதியின் 6 ஆம் பிரிவு | சான்றிதழ் உறுதியின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ள அரை ஆண்டு பங்களிப்பு பணத்தின் அளவில் ஆகக் குறைந்தது 75 சதவீதம் இருந்தால் பங்களிப்பு பணம் செலுத்தும் காலம் முடிவடைகையில் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட ஓய்வூதியத்தினை விட குறைந்த ஓய்வூதியம் பெறுவதற்கு பங்களிப்பாளர்களுக்கு தகமை இருந்தும் அதனை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது பங்களிப்பாளர்களால் ஓய்வூதிய நலன்கள் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய சமூக பாதுகாப்பு நலன்திட்ட அதிகாரச் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொடராக 5 தவணைப் பணங்களைச் செலுத்த தவறிய குறித்த பங்களிப்பாளர்களுக்கு அவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் கீழ் நலன்களை இழப்பார்கள் அதற்கிணங்க இப்பங்களிப்பாளர்கள் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களை செலுத்த தவறியுள்ளதனால் பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | தவணைப் பணத்தை முறைப்படியாக செலுத்தாமையின் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ளது எனபங்களிப்பாளர் தெரியப்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 192,873,887 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 249,530,974 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 56,657,087 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வட்டி வருமானம் அதிகரித்ததற்கு ஓப்பீடாக விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவு ரூபா 145,157,212 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 6 மாதங்கள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியத்திற்கு தகமையுள்ளவர்களின் பெயர் மரணமடைந்தவர்கள் என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளாது ஓய்வூதியப் பிரிவின் உத்தியோகத்தர்களால் ஓய்வூதியக் கொடுப்பனவுப் பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | விவசாயிகள் ஓய்வூதியக் கொடுப்பனவு நடைமுறையானது தபால் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. பங்களிப்பாளர் மரணமடைந்த சந்தர்ப்பங்களில் உரிய தபால் அலுவலகங்களின் மூலம் மரணமடைந்த பங்களிப்பானர்களின் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும். தொடர்ச்சியாக ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியக்காரர்கள் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு அந்த ஓய்வூதியக்காரர்களை கொடுப்பனவு பெயர்ப் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதிய பெயர்ப் பதிவேட்டிலிருந்துபெயரை நீக்குவதற்கு முன்னர் மரணமடைந்தமை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | விவசாய ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியத்தினை செலுத்துதல் மற்றும் நிருவாகச் செலவுகளுக்காக மாதாந்தம் பொதுத்திறைசேரியினால் பணம் வழங்கப்படுவதுடன் அவ்வாறு இருந்தும் விவசாயிகளுக்கு பலவீன மற்றும் மரணப்பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தில் வருடாந்தம் தவணைப் பணத்தை வைப்புச் செய்த விவசாயிகள் காப்புறுதி செய்து காப்புறுதி நிதியம் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக ரூபா 17,197,260 தவணைப் பணத்தை செலவு வைத்து ரூபா 1,173,625 மரணக் கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்த நிதியத்தின் மீதி ரூபா 1,258,775,352 ஆகும். ஒவ்வொரு ஆண்டிலும் செலுத்திய நலன்கள் இந்த நிதியத்திற்கு வருடாந்தம் செலவுவைக்கப்படுகின்ற தவணைப் பணங்களில் 5 சதவீததிலிருந்து 10 சதவீதம் வரையான குறைந்த அளவு என்பதனால் இக்காப்புறதியினை செயற்படுத்துவதில் வினைத்திறன் | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் தொடக்கத்திலேயே மரண மற்றும் பலவீன பணிக்கொடை கொடுப்பனவுகளை அமுல்ப்படுத்துவதற்காக பங்காளிப்பாளர்கள் உரிய தவணைப் பணத்தை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்ததுடன் அந்த செலுத்திய தவணைப் பணம் சபையில் வைத்திருக்கப்பட்டு ஒரு நிதியம் கட்டியெழுப்பப்பட்டது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு செலுத்தப்படுகின்ற தவணைப் பணம் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | காப்புறுதியை செயற்படுத்தும் வினைத்திறனை மீளாய்வு செய்தல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | திட்டத்தின் கீழ் பங்களிப்புபணம் பெற்றுக்கொண்டிருக்கும் விவசாய பங்களிப்பாளர்களின் ஆயுள் தரவு தகவல்களைப் பெற்று தகவல் முறைமையை நாளதுவரையாக்குவதற்காக கமநல சேவை திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி மாத்தில் ரூபா 5,640,925 செலவு செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் எதிர்பார்த்த தகவல்களில் 20 சதவீதத்தினை விட குறைந்த அளவு என்பதனால் அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முறைமை நாளதுவரையாக்கப்பட்டிருக்காததனால் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற தவணைப்பண குறிப்பு புத்தகங்களின் தகவல்களை மீளாய்வின் மூலம் சேர்த்து பிரதியைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் உரிய மீளாய்வு நடவடிக்கையின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மிகவும் சிக்கலாக இருந்ததனால் எதிர்பார்த்தவாறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | தகவல் முறைமையை நாளதுவரையாக்கி எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பங்களிப்பாளர்களால் செலுத்தப்படுகின்ற தவணைப் பணம் பேணப்படுகின்ற தகவல் முறைமைக்கு உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக பேணப்பட்டிருக்காததனாலும் பற்றுச் சீட்டுக்களைப் பரீட்சிக்க கூடியதாக பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தாது வெளியே வைத்திருந்ததனாலும் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br>(i) ''முறைப்படியாக செலுத்திய தவணைப் பணத்தை'' கணக்கீடு செய்வதற்கு முடியாமை.<br>(ii) அனைத்து தவணைப்பண ங்களும் செலுத்தப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முடியாமை.<br>(iii) ஓய்வூதியத்தினைக் கோரும் பங்களிப்பாளர்களிடம் உள்ள தவணைப் பண குறிப்பு புத்தகத்தில் பங்களிப்பு பணம் செலுத்திய திகதியை அல்லது தொடக்க பற்றுச்சீட்டுப் பிரதியைப்பெற்று பங்களிப்பு பெறுவனவு தகவல்களை உறுதிபடுத்துவதற்கு ஏற்பட்டிருந்தமை. | இப்பலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக புதிய கணனி தரவு முறைமையை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கை தற்பொழுது அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறையின் அடிப்படையில் தவணைப் பணத்தை கணனிமயப்படுத்தலினை மேற்கொள்வதற்கு முடியாததுடன் 2022 ஆம் ஆண்டிலிருந்து மதீண்டும் தவணைப் பணத்தை கணனி மயப்படுத்தலினை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தவணைப்பண பெறுவனவு தகவல்களை நாளதுவரையாக சபையில் பேணி ஓய்வூதிய நலன்களுக்கு தகமையுள்ள பங்களிப்பாளர்களுக்கு தாமதமின்றி நலன்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (iv) தொடர்சியாக 5 தவணைப் பணங்களை செலுத்த தவறியமை தொடர்பாக பங்களிப்பாளர்களுக்க தெரியப்படுத்த முடியாமை | | |
| | (v) நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற பங்களிப்பு வருமானத்தின் முழுமைத்தன்மை மற்றும் சரியான தன்மையை கணக்கீட்டின் போதும் கணக்காய்வின் போதும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமை | | |
| | (vi) தவணைப்பண வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய முடியாமை | | |
| | (vii) மாதாந்தம் மற்றும் அரையாண்டு ரீதியாக தவணைப் பணத்தை செலுத்துகின்ற விவசாயிகளால் 60 வயது பூர்த்தியானதன் பின்னர் ஓய்வூதியத்திற்காக வேண்டப்படும் வரை ஓய்வூதியத்தினை கணிப்பீடு செய்வதற்கு சபையிடம் தவகல்கள் இல்லாமை. | | |
| | (viii) கிராமிய வங்கி மற்றும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் போன்ற முகவர் நிறுவனங்களிடமிருந்தும் மாவட்ட அலுவலகங்களிடமிருந்தும் அறவிடப்படுகின்ற பங்களிப்பு பணத்தை அனுப்பிவைப்பதற்கு தாமதமடைகின்ற சந்தர்ப்பங்களில் அதனை இனங்காண்பதற்கு முடியாமை | | |
| (ஆ) | புதிய விவசாயிகள் ஓய்வூதிய நலத்திட்டத்தினை ஆரம்பித்து 1 1/2 ஆண்டுகள் கடந்திருந்தும் புதிய 485 பங்களிப்பாளர்களிடம் திட்டத்திற்கு பங்களிப்பினைப் பெற்றிருந்தும் முறைப்படியாக தவணைப் பணத்தை செலுத்தாத பங்களிப்பாளர்களை இனங்கண்டு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆட்சேர்ப்புக்கள் தொடர்பான தரவுகள் தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ள தகவல் முறைமைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. தவணைப் பணத்தை செலுத்தாத விவசாயிகளுக்கு எதிர்காலத்தில் SMS தகவலினூடாக தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | முறைப்படியாக தவணைப் பணத்தை செலுத்தாத பங்களிப்பாளர்களை இனங்கண்டு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |